**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்</u>**

**<u>முன்னிலை</u> : திருமதி. கா. ஸ்ரீபதி, B.A., L.L.B.,**

நீதித்துறை நடுவர், வாணியம்பாடி.

2026ம் ஆண்டு ஜூன் மாதம் 25 ஆம் நாள் வியாழன்கிழமை

<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 14/2018</u>

<u>CNR NO. TNTU09-000076-2018</u>

| வரிசை எண். | விளக்கம் | விவரங்கள் |
|---|---|---|
| 1. | குற்றமுறையிடுபவர் | அரசுக்காக சிறப்பு காவல் உதவி ஆய்வாளர், வாணியம்பாடி கிராமிய காவல் நிலையம்.<br>குற்ற எண். 79/2017. |
| 2. | எதிரிகள் | 1. தனபால் த/பெ நாராயணமந்திரி<br>2. மூவேந்தன் த/பெ ராமசந்திரன் |
| 3. | குற்றம் | இ.த.ச பிரிவுகள் 379, 430. |
| 4. | சம்பவம் நடந்த தேதி | 25.02.2017 |
| 5. | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள். | 25.02.2017 |
| 6. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | A1-25.02.2017-28.02.2017<br>A2-AB |
| 7. | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 19.03.2018 |
| 8. | கு.வி.மு.ச.பிரிவு 241-ன் கீழ் குற்றம் குறித்து வினவப்பட்ட நாள் | 19.03.2018 |
| 9. | கு.வி.மு.ச.பிரிவு 317-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யபட்ட விவரம் அதன் முடிவுகள். | 1.02.08.2025 குவிமுச.பிரிவு 311-ன் கீழ் 2785/2025. |
| 10 | வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | அ.சா.1-20.03.2018<br>அ.சா.2- 04.09.2018, 15.06.2026<br>அ.சா.3 - 04.09.2018, 18.06.2026 |
| 11 | எதிரிகளிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச.313(1) (ஆ)-ன் கீழ் வினவிய நாள் | 14.02.2019 |
| 12 | எதிரிகள் மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள் | - |
| 13 | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 25.06.2026 |

| | | |
|---|---|---|
| 14 | தீர்வு | குவிமுச பிரிவு 248(1) கீழ் விடுதலை. |

**<u>நீதித்துறை படிவம் எண்: 61</u>**

புகார்தாரர் : அரசுக்காக சிறப்பு காவல் உதவி ஆய்வாளர், வாணியம்பாடி கிராமிய காவல் நிலையம்.

எதிரிகள் : 1. தனபால் த/பெ நாராயணமந்திரி
2. மூவேந்தன் த/பெ ராமசந்திரன்

குற்றம் : இ.த.ச பிரிவுகள் 379, 430.

முடிவு : இறுதியாக, அரசு தரப்பில் எதிரிகளுக்கு எதிரான இ.த.ச பிரிவுகள் 379, 430 குற்றச்சாட்டுகள் ஆனது சந்தேகத்திற்கு இடம் இன்றி நிரூபிக்கப்படாததால் சந்தேகத்தின் பலன்களை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்வது நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்த நீதிமன்றம் தீர்மானித்து எதிரியை வழக்கிலிருந்து குவிமுச பிரிவு 248(1) கீழ் விடுதலை செய்து உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

| வ. எண் | எதிரிகள் பெயர் | தந்தை பெயர் | சாதி (அ) இனம் | தொழில் | முகவரி | வயது |
|---|---|---|---|---|---|---|
| 1 | தனபால் | நாராயணமந்திரி | இந்து | விவசாயம் | மேல்குப்பம், வாணியம்பாடி | 44 |
| 2 | மூவேந்தன் | ராமசந்திரன் | இந்து | கூலி | உதயேந்திரம், வாணியம்பாடி | 61 |

| தேதி | | | | | | | தாமதம் (ம) அதன் விளக்கம் |
|---|---|---|---|---|---|---|---|
| குற்றம் | புகார் அறிக்கை | கைது செய்யப்பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் | விசாரணையின் தொடக்கம் | விசாரணையின் முடிவு | உத்தரவு | |
| 25.02.17 | 04.03.17 | A1–25.02.17<br>A2–AB | A1–28.02.17<br>A2–AB | 19.03.18 | 14.02.19 | 25.06.26 | – |

இவ்வழக்கானது 19.03.2018 அன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு 14.02.2019–ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த அரசு குற்றதுறை உதவி வழக்கறிஞர் நிலை 1 திருமதி.மகேஸ்வரி அவர்கள் ஆஜராகியும் எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.குமரன், B.A., LL.B, அவர்கள் ஆஜராகியும் இது நாள் வரை விசாரணை செய்தும் வழக்கின் சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் இவ்வழக்கில் வழங்கிடும்

## தீர்ப்புரை

### 1. குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம் :

இவ்வழக்கில் வாணியம்பாடி கிராமிய காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் கடந்த 25.02.2017ம் தேதி 14.00 மணிக்கு உதயேந்திரம் பாலாற்றங்கரையோரம் உள்ள ரோடில் கண்காணித்துக்கொண்டு போகும்போது இவ்வழக்கின் TN 23 AQ 2866 மற்றும் அதன் டிரெய்லர் எண்.1317 என்ற டிராக்டரை 1ம் எதிரி தனபால் என்பவர் ஒரு யூனிட் ஆற்று மணலுடன் ஓட்ட டிராக்டரில் உள்ள மணல் மேல் டிராக்டரின் உரிமையாளரான 2ம் எதிரி மூவேந்தன் என்பவர் உட்கார்ந்துக் கெண்டு, இருவரும் எவ்வித அரசு அனுமதியின்றி, பொதுமக்களுக்கு குடிநீருக்கு பங்கம் ஏற்படும் என தெரிந்தும் ஒரு யூனிட் ஆற்று மணலை டிராக்டரில் சட்டத்திற்கு விரோதமாக கடத்தி குற்றம்புரிந்துள்ளார்கள். எனவே, எதிரிகள் இருவரும் இ.த.ச பிரிவுகள் 379, 430-ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக வாணியம்பாடி கிராமிய காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரிகள் மீது முகாந்திரம் வழக்கு இருப்பதால் இவ்வழக்கானது நீதிமன்றத்தால் இ.த.ச. பிரிவுகள் 379, 430-ன் கீழ் கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இந்த வழக்கில் எதிரிகள் ஆஜரானதும், வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணத்தின் நகல்கள் அனைத்தும் எதிரிகளுக்கு கு.வி.மு..ச 207-ன்படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. குற்றம்சாட்டப்பட்ட நபர்களுக்கு போதிய கால அவகாசம் கொடுத்து, ஆவணங்களை பரிசீலித்தும், எதிரிகள் மீதான குற்ற செயல்கள் விசாரிக்க போதுமான முகாந்திரம் இருந்த காரணத்தினால், எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 379, 430-ன் கீழான குற்றத்தின் சாராம்சத்தை விளக்கி கூற வினவியபோது, எதிரிகள் குற்றத்தை மறுத்துரைத்ததால் அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.3** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். **அ.சா.ஆ1 முதல் அ.சா.ஆ.5** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**5. அரசுதரப்பு சாட்சிகளின் மூலம் தெரியவரும் அரசுதரப்பு வழக்கின் சுருக்கம்:**

5 (i). இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.3 திரு.ராஜமாணிக்கம், சிறப்பு உதவி ஆய்வாளர் அவர்கள் கடந்த 25.07.2017ம் தேதி மதியம் 02.00 மணிக்கு அ.சா.1 திரு.முருகன், தலைமை காவலர் மற்றும் அ.சா.2 திரு.கோபி, இரண்டாம் நிலை காவலர் ஆகியோருடன் உதயேந்தரம் பாலாற்றங்கரை ஓரம் உள்ள ரோடு பகுதியில் கண்காணித்துக்கொண்டு சென்ற போது, சந்தேகப்படும் சூழ்நிலையில் ஒரு டிராக்டர் வந்தது அதை தடுத்து நிறுத்தி பார்க்க அதன் என்ஜின் நெம்பர் TN 23AQ 2866 என்றும் டிரெய்லர் நெம்பர்.TN W 1317 என்று இருந்ததாகவும், அந்த டிராக்டரில் வண்டி ஒருவர் ஓட்டியும், அவர் அருகில் மற்றொருவரும் வந்ததாகவும், அதில் ஒருவர் போலிசை கண்டதும் எத்தனித்து கொண்டு ஓடிவிட்டதாகவும், மேலும் டிராக்டர் ஓட்டி வந்தவரை விசாரிக்க அவர் அவர் பெயர் தனபால் என்று கூறியதாகவும், மேலும் ஓடிய நபரை பற்றி விசாரிக்க அவர் உதயேந்திரம் நாயுடு தெருவை சேர்ந்த மூவேந்தன் என்று கூறியதாகவும், மேலும் டிராக்டரை சோதனை செய்ய அதில் ஒரு யூனிட் ஆற்று மணல் இருந்ததாகவும், ஓட்டி வந்த நபரை விசாரிக்க அந்த மணலை திருட்டு தனமாக எந்தவித அனுமதியின்றி கடத்தி வந்ததாக சொன்னதாகவும், பின் ஆற்று மணலையும், டிராக்டரையும், டிரெய்லரையும் அ.சா.ஆ.1 கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றி நிலையம் சேர்ந்து நிலைய குற்ற எண் 79/2018 இ.த.ச பிரிவுகள் 379, 430–ன் கீழ் அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். பின்னர் எதிரியிடம் 14.30 மணிக்கு போலிசார் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பெற்று முறைப்படி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். டிராக்டரையும், டிரெய்லரையும் அ.சா.ஆ.5 படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார். பின் மணலை வாணியம்பாடி வட்டாட்சியர் அலுவலகத்தில் ஒப்படைத்து அதற்கான அ.சா.ஆ.4 வட்டாட்சியர் சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீதான குற்றம் உண்மையென தெரியவந்ததால் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

6. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்தும் மற்றும் சான்றாவணங்களில் இருந்தும் குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு பாதகமாக அமைந்த சாட்சிய சூழ்நிலைகளை எதிரிகளிடம் குவிமுச பிரிவு 313(i)(ஆ)–ன் கீழ் வினவியபோது எதிரிகள் மேற்படி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பொய் என்று

கூறினார். மேலும், எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில், எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சம்பவத்தை தகுநிலை ஐயத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதேயாகும்.**

7. கடந்த 25.02.2017ம் தேதி 14.00 மணிக்கு உதயேந்திரம் பாலாற்றங்கரையோரம் எவ்வித அரசு அனுமதியின்றி TN 23AQ 2866 மற்றும் அதன் டிரெய்லர் எண்.1317 என்ற டிராக்டரை 1ம் எதிரி தனபால் என்பவர் ஒரு யூனிட் ஆற்று மணலுடன் ஓட்ட டிராக்டரில் உள்ள மணல் மேல் டிராக்டரின் உரிமையாளரான 2ம் எதிரி மூவேந்தன் என்பவர் உட்கார்ந்துக் கெண்டு, ஒரு யூனிட் ஆற்று மணலை டிராக்டரில் சட்டத்திற்கு விரோதமாக கடத்திய குற்றத்திற்காகவும், ஆற்று மணல் எடுப்பதால் பொது மக்களுக்கு குடிநீர் பஞ்சம் ஏற்படும் விதத்தில் குற்றம் புரிந்ததாக எதிரிகள் மீது அரசு தரப்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

8. அ.சா.1 திரு.முருகன், தலைமைக்காவலர் அவரது சாட்சியதில், " 25.02.2017ம் தேதி பகல் 02.00 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் ராஜமாணிக்கம், காவலர் கோபி ஆகியோர் பாலாற்றங்கரையில் மணல் கடத்தி வருவதாக தகவல் கிடைத்து சென்றபோது எதிரில் ஒரு டிராக்டர் வந்தது. TN 23 AQ 2866 டிரைலர் நம்பர் TN 23 W 13 என்ற வாகனத்தை ஆஜர் எதிரி தான் ஓட்டி வந்தார். இன்னொருவர் வந்தார். தப்பி ஓடி விட்டார். அவர் இந்நீதிமன்றத்தில் இல்லை. வண்டியில் ஒரு யூனிட் மணல் இருந்தது. அதை மகசரில் சிறப்பு உதவி ஆய்வாளர் கைப்பற்றினார். அதில் நானும், காவலர் கோபியும் கையெழுத்து போட்டோம். எதிரியை கைது செய்து எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து வழக்கு பதிவு செய்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தார். " என சாட்சியமளித்துள்ளார். எதிரி தரப்பு குறுக்கு விசாரணையின்போது உதயேந்திரத்திலிருந்து ஆம்பூர் செல்லும் கைலாசகிரி ரோட்டில் தான் வண்டியை பிடித்தோம். அப்போது அங்கு போக வர ஆட்கள் இருந்தார்கள். " என சாட்சியமளித்துள்ளார்.

9. அ.சா.2 கோபி, இரண்டாம் நிலை காவலர், அவரது சாட்சியத்தில், 2017ம் வருடம் நானும் தலைமைக்காவலர் முருகனும் ரோந்து உதயேந்திரம் வழியாக சென்றபோது

டிராக்டர் ஒன்று வந்தது. எங்களை கண்டதும் அந்த டிராக்டரின் ஓட்டுநர் தப்பி ஓட பார்த்தார். அவரை விசாரித்ததில் அவர் பெயர் தனபால் என கூறினார். மேற்படி டிராக்டரில் மணல் இருந்தது. அதை கைப்பற்றி நிலையம் எடுத்து வந்து சாட்சி3 ஆன ராஜமாணிக்கத்திடம் ஒப்படைத்தோம். " என சாட்சியமளித்துள்ளார். எதிரி தரப்பு குறுக்கு விசாரணையின்போது நானும் தலைமைக்காவலர் முருகனும் 1ம் எதிரி மற்றும் டிராக்டரை பிடித்து வந்து சிறப்பு உதவி ஆய்வாளரிடம் காவல் நிலையத்தில் ஒப்படைத்தோம் என்றால் இல்லை, தகவல் சொன்னோம், சிறப்பு உதவி ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார், டிராக்டரை மடக்கி பிடித்தபோது பொதுமக்கள் எத்தனை நபர்கள் பார்த்தார்கள் என்றால் 4, 5 நபர்கள் பார்த்திருப்பார்கள், பக்கத்தில் வீடுகளும் இருந்தது. " என அவரது முதன்மை சாட்சியத்திற்கு முரணாக சாட்சியமளித்துள்ளார்.

10. வழக்கின் புலன்விசாரணை அதிகாரியான அ.சா.3 ராஜமாணிக்கம், சிறப்பு உதவி ஆய்வாளர் அவரது சாட்சியத்தில் கடந்த 25.07.2017ம் தேதி மதியம் 02.00 மணிக்கு மணல் திருட்டு வழக்கு சம்மந்தமாக வாணியம்பாடி உதயேந்திரம் பாலாற்றங்கரை ஓரம் உள்ள ரோடு பகுதியில் நானும், தலைமைக்காவலர் முருகன், காவலர் கோபி ஆகியோர் சகிதமாக கண்காணித்து கொண்டு சென்றபோது அந்த ரோட்டில் சந்தேகப்படும் சூழ்நிலையில் ஒரு டிராக்டர் வந்தது. அதை தடுத்து நிறுத்தி பார்க்க அதன் என்ஜின் நம்பர் TN 23 AQ 2866 என்றும், டிரெய்லர் நம்பர் TN W 1317 என்றும் இருந்தது. ஒருவர் ஓட்டியும், அவர் அருகில் மற்றொருவரும் வந்தார்கள். அதில் ஒருவர் போலிசைக்கண்டு எத்தனித்து ஓடிவிட்டார். டிராக்டர் ஓட்டி வந்தவர் தனபால் என்று கூறினார். மேலும் ஓடிய நபர் மூவேந்தன் என்று சொன்னார். டிராக்டரில் ஒரு யூனிட் மணல் இருந்தது. ஓட்டி வந்த நபரை விசாரிக்க அந்த மணலை திருட்டு தனமாக எவ்வித அனுமதியின்றி கடத்தி வந்ததாக சொன்னார். அவரிடம் 14.30 மணிக்கு போலிசார் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பெற்று எதிரியை கைது செய்து கைப்பற்றப்பட்ட ஆற்று மணலையும், டிராக்டரையும், டிரெய்லரையும் மகசரில் கைப்பற்றி நிலையம் வந்து வழக்கு பதிவு செய்து 1ம் எதிரி தனபாலை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி வைத்தேன். கைப்பற்றப்பட்ட மணலை தாலுக்கா அலுவலகத்தில் ஒப்புவித்ததை குறித்து சாட்சியம் அளித்துள்ளார் என்பது புலனாகிறது. எதிரி தரப்பு குறுக்கு விசாரணையின்போது சம்பவயிடத்திற்கு யார் முதலில் சென்றதது என்றால் மூன்று பேரும் ஒன்றாக தான்

சென்றோம் என்றும், 1ம் எதிரி தனபாலை எங்கள் மூன்றுபேரில் யார் முதலில் பிடித்தது என்றால் நாங்கள் மூன்று பேரும் தான் சம்பவயிடத்தில் பிடித்தோம் என்றும், கைப்பற்றுதல் மசரில் நேரம் திருத்தப்பட்டுள்ளது என்றும், தலைமைக்காவலர் முருகன், இரண்டாம் நிலை காவலர் கோபி ஆகியோர் 1ம் எதிரி தங்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவோ அதில் அவர்கள் கையொப்பம் செய்ததாகவோ வாக்குமூலத்தில் எதுவும் கூறவில்லை என்றும், நாங்கள் கைப்பற்றிய டிரேக்டர் மற்றும் டிரைலர் ஆகியவற்றின் உரிமையாளர் யார் என்றால் மூவேந்தன் என்பவர் என்றும், டிராக்டர் மற்றும் டிரைலர் மூவேந்தனுக்கு சொந்தமானது என்று சொல்வதற்கு இவ்வழக்கில் ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை என்றும், இவ்வழக்கில் கைப்பற்றிய 1 யூனிட் மணலை வட்டாச்சியர் அலுவலகத்தில் ஒப்படைத்தற்கு அவரை இவ்வழக்கில் சாட்சியாக சேர்த்துள்ளோமா என்றால் இல்லை என்றும், படிவம் 91 ல் சாட்சிகளிடம் கையொப்பம் வாங்கி உள்ளேனா என்றால் இல்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

11. இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட அரசு தரப்பில் சாட்சிகளான அ.சா.1 முதல் அ.சா.3ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், அ.சா.1 மற்றும் அ.சா.3 அவர்களது சாட்சியத்தில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்கள் ரோந்திற்கு சென்றதாக சாட்சியமளித்துள்ள நிலையில் அ.சா.2 அவரது சாட்சியத்தில் அ.சா.1 முருகன் மற்றும் அ.சா.2 கோபி இருவரும் தான் ரோந்திற்கு சென்று டிராக்டர் மற்றும் எதிரியை நிலையம் கொண்டு வந்து அ.சா.3யிடம் ஒப்படைத்ததாக முதன்மை விசாரணையில் சாட்சியமளித்துவிட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில் எதிரியையும் வழக்கு சொத்தையும் கைப்பற்றி அ.சா.3யிடம் தகவல் சொன்னோம், சம்பவயிடத்திற்கு வந்துவிட்டார் என முன்னுக்குப்பின் முரணாக சாட்சியமளித்துள்ளார். அ.சா.2 கோபி, இரண்டாம் நிலை காவலர், அவரது சாட்சியத்தில், டிராக்டரை மடக்கி பிடித்தபோது பொதுமக்கள் எத்தனை நபர்கள் பார்த்தார்கள் என்றால் 4, 5 நபர்கள் பார்த்திருப்பார்கள், பக்கத்தில் வீடுகளும் இருந்தது என சாட்சியமளித்துள்ள நிலையில் அந்த நான்கைந்து நபர்களை இவ்வழக்கில் தனிநபர் சாட்சிகளாக சேர்க்காதது அரசு தரப்பு வழக்கை சந்தேகத்திற்கு உள்ளாகுவதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், அ.சா.3 ராஜமாணிக்கம் அவரது சாட்சியத்தில் கைப்பற்றிய டிராக்டர் மற்றும் டிரைலர் ஆகியவற்றின் உரிமையாளர் யார் என்றால் மூவேந்தன் என்பவர் என்றும், டிராக்டர்

மற்றும் டிரைலர் மூவேந்தனுக்கு சொந்தமானது என்று சொல்வதற்கு இவ்வழக்கில் ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை என்றும், இவ்வழக்கில் கைப்பற்றிய 1 யூனிட் மணலை வட்டாச்சியர் அலுவலகத்தில் ஒப்படைத்தற்கு அவரை இவ்வழக்கில் சாட்சியாக சேர்த்துள்ளோமா என்றால் இல்லை என்றும், கைப்பற்றுதல் மசரில் நேரம் திருத்தப்பட்டுள்ளது என்றும் சாட்சியமளித்திருப்பது வழக்கின் தோற்றம் குறித்தும் அது தொடர்பான நடவடிக்கைகள் குறித்தும் சந்தேகத்தை தோற்றுவிக்கக் கூடியதாக உள்ளது.

12. மேலும், அ.சா.3 அவரது சாட்சியத்தில் போலிசார் முன்னிலையில் எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவுசெய்தேன் என சாட்சியமளித்துள்ள நிலையில் அ.சா.1 முருகன் மற்றும் அ.சா.2 கோபி அவர்களது சாட்சியத்தில் எதிரி தங்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவோ, தாங்கள் கையொப்பம் செய்ததாகவோ எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை. எனவே, 1ம் எதிரி தான் சம்பவத்தின் போது வழக்கு சொத்து டிராக்டர் மூலம் மணலை திருடி வந்தார் என்பதை சாட்சியங்களின் மூலம் நிரூபிக்காததாலும், வழக்கு சொத்து டிராக்டர் 2ம் எதிரிக்கு சொந்தமானது என்பதையும் நிரூபிக்கும் வண்ணம் ஆவணங்களை தாக்கல் செய்யாததாலும், எதிரியையும் குற்ற சம்பவத்தையும் இணைக்கும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகள், ஒருவருக்கொருவர் முரண்பட்டு சாட்சியம் அளித்து இருப்பதாலும், இக்குற்ற சம்பவத்தில் எதிரிகளின் ஈடுபாடு குறித்து இந்நீதிமன்றம் சந்தேகம் அடைகிறது.

13. எனவே, மேற்கண்ட காரணங்களால் அரசு தரப்பு வழக்கானது எதிரிகளுக்கு எதிராக சரிவர நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் அரசு தரப்பின் வழக்கிற்கு எதிராக தீர்வு காணப்படுகிறது. எனவே இவ்வழக்கில் ஏற்படும் சந்தேகத்தின் பலன்களை எதிரிகளுக்கு சாதகமாக அளித்து எதிரிகள் இ.த.ச பிரிவுகள் 379, 430 கீழ் குற்றவாளிகள் இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

14. **<u>முடிவாக</u>** இவ்வழக்கில் எதிரிகள் மீதான இ.த.ச. பிரிவு 379–ன்கீழான குற்றத்தை பொறுத்து எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 248(1)ன்படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

15. எதிரிகள் மீது அரசு தரப்பின் வழக்கில் எழும் சந்தேகங்களின் பலனை வழங்கி விடுதலை செய்திருப்பதால் அவர் எழுதிக்கொடுத்திருக்கிற பிணைமுறிவு மேல்

முறையீட்டுக் காலத்துக்குப் பின்பு ரத்தாகிவிடும் என்றும், இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது. இவ்வழக்கில் அரசு தரப்பில் வழக்குச் சொத்தான டிராக்டர் TN 23 AD 2866 மற்றும் டிரைலர் TN W 1317 C.P.NO.70/2017 ஆக வாணியம்பாடி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதை மனுதாரர் நீதிமன்றம் மூலம் CMP.NO.549/2017ல் நாள் 08.03.2017ல் ஏற்பட்ட உத்தரவின் அடிப்படையில் இடைக்காலமாகப் பெற்றுச் சென்றுள்ளதை அவரே வைத்துக் கொள்ளவும், வழக்குச் சொத்தைப் பொறுத்து அவர் எழுதிக்கொடுத்துள்ள பிணைமுறிவு மேல்முறையீட்டுக் காலத்திற்குப் பின்பு ரத்தாகி விடும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்து சரிபார்க்கப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு ஜூன் திங்கள் 25 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்/-கா.ஸ்ரீபதி)
நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

**அரசு தரப்பு சாட்சிகள்**

| வ. எண் | அரசு தரப்பு சாட்சி எண் | சாட்சிகளின் பெயர்கள் | விளக்கம் |
|---|---|---|---|
| 1. | அ.சா.1 | திரு.முருகன், தலைமை காவலர். | ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் சாட்சி |
| 2. | அ.சா.2 | திரு.கோபி, இரண்டாம் நிலை காவலர். | ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் சாட்சி |
| 3. | அ.சா.3 | திரு.ராஜமாணிக்கம், சிறப்பு உதவி ஆய்வாளர் | புலன் விசாரணை அதிகாரி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| வ. எண் | ஆவணத்தின் எண் | ஆவணங்களின் விளக்கம் | நிரூபித்தவர்/ சான்றளித்தவர் |
|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | 27.02.2017ஆம் தேதியிட்ட கைப்பற்றுதல் | அ.சா.1 |

| | | | |
|---|---|---|---|
| | | மகசர். | |
| 2. | அ.சா.ஆ.2 | 27.02.2017ஆம் தேதியிட்ட ஒப்புதல் வாக்கு மூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும். | அ.சா.2 |
| 3. | அ.சா.ஆ.3 | 25.02.2017ஆம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை. | அ.சா.3 |
| 4. | அ.சா.ஆ.4 | 07.03.2017ஆம் தேதியிட்ட வட்டாட்சியர் சான்றிதழ். | அ.சா.3 |
| 5. | அ.சா.ஆ.5 | 27.02.2017ஆம் தேதியிட்ட படிவம் 91. | அ.சா.3 |

**அரசு தரப்பு சான்று பொருள்** – இல்லை.

**எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றுப் பொருட்கள்** – இல்லை.

**எதிரி தரப்பு சான்றாவணம்** – இல்லை.

**குறிப்பு**

1) எந்த சாட்சியும் 3 முறைக்குமேல் நிறுத்தி விசாரிக்கப்படவில்லை.

2) வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.

3) முடிவு காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

(ஒம்/–கா. ஸ்ரீபதி)
நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

//உண்மை நகல்//

SRIPATHI K

JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI
Digitally signed by SRIPATHI K
Location: TIRUPATHUR

நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.